உ

சிவமயம்.

காரைக்காலம்மையார்
திருவாய்மலர்ந்தருளிய

அற்புதத்திருவந்தாதி
மூலம்

திருவிரட்டைமணிமாலை
மூலம்.

இவை
திருத்தணிகை
விசாகப்பெருமாளையரவர்களால்
பரிசோதிக்கப்பட்டு
பா[illegible]ருமாரையரவர்களது
களாநிதி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

சென்னபட்டணம்.
குரோதன ௵ வைகாசி ௴
முதற்பதிப்பு.

உ

சிவமயம்.

பிரசித்தபத்திரிகை.

இந்தப்
புத்தகம்
வாங்க வே
ண்டியவர்கள்
சென்னப்பட்ட
ணம் பெத்து
நாயக்கன்பேட்டைத் தங்கசாலைத்தெருவில்
மக்கி-முத்தையாமுதலியார் வீதியில் ௧௧-வது
கதவிலக்கமுள்ள வீட்டில் ம-ா-ா-ஸ்ரீ-திரு
த்தணிகை - விசாகப்பெருமா
ளையரவர்களிடத்திலும், ஷை
பேட்டையில்ஏழுகிணற்றுக்
கடுத்த அலுக்காணத்தம்
மன்கோயிலுக்கு வட
புறம் - வீராசாமிபிள்ளைத்
தெருவில் - ௩௮-வது கதவி
லக்கமுள்ள வீட்டில் ம-ா
ா-ஸ்ரீ-இரத்தினமுதலியாரவர்க
ளிடத்திலும், இராயவேலூரில் மேற்ப
டி ஐயர்வீட்டிற் பள்ளிக்கூடம் வைத்திருக்
கும் வே - சுப்பராயவுபாத்தியாயரிடத்திலும்
வாங்கிக்கொள்ளலாம்**************

உ

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார்

திருவாய்மலர்ந்தருளிய

அற்புதத்திருவந்தாதி.

பிறந்துமொழிபயின்றபின்னெல்லாங்காதல்
சிறந்துநின்சேவடியேசேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்றகண்டத்துவானோர்பெருமானே
யெஞ்ஞான்றுதீர்ப்பதிடர். க

இடர்களையாரேனுமெமக்கிரங்காரேனும்
படருநெறிபணியாரேனுஞ்—சுடருருவி
லென்பறாக்கோலத்தெரியாடுமெம்மனார்க்
கன்பறாதென்னெஞ்சவர்க்கு. உ

அவர்க்கேயெழுபிறப்புமாளாவோமென்றும்
அவர்க்கேநாமன்பாவதல்லாற்—பவர்சடைமேல்
பாகாப்போழ்சூடுமவர்க்கல்லான்மற்றொருவர்க்
காகாப்போமெஞ்ஞான்றுமாள். ௩

ஆளானேமல்லலறியமுறையிட்டாற்
கேளாததென்கொலோகோளாமை—நீளாகஞ்
செம்மையானாகித்திருமிடறுமற்றொன்றாம்
எம்மையாட்கொண்டவிறைக்கு. ௪

இறையவனேயெவ்வுயிருந்தோற்றுவிப்பான்றோற்றி
யிறையவனேயீண்டிறக்கஞ்செய்வா—னிறையவனே
யெந்தாயெனவிரங்குமெங்கண்மேல்வெந்துயரம்
வந்தாலதுமாற்றுவான். ௫

வானத்தானென்பாருமென்கமற்றும்பர்கோன்
தானத்தானென்பாருந்தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத்தாலிருண்டமெய்யொளிசேர்கண்டத்தான்
என்னெஞ்சத்தானென்பனியான். ௬

யானேதவமுடையேனென்னெஞ்சேநன்னெஞ்சம்
யானேபிறப்பறுப்பானெண்ணினேன்—யானேயக்
கைம்மாவுரிபோர்த்தகண்ணுதலான்வெண்ணீற்ற
அம்மானுக்காளாயினேன். ௭

ஆயினேனாள்வானுக்கன்றேபெறற்கரிய
னாயினேனஃதன்றேயாமாறு—தூய
புனற்கங்கையேற்றானோர்பொன்வரையேபோல்வான்
அனற்கங்கையேற்றானருள். ௮

அருளேயுலகெலாமாள்விப்பதீசன்
அருளேபிறப்பறுப்பதானா—லருளாலே
மெய்ப்பொருணோக்கும்விதியுடையேனெஞ்ஞான்றும்
எப்பொருளுமாவதெனக்கு. ௯

எனக்கினியவெம்மானையீசனையானென்றும்
மனக்கினியவைப்பாகவைத்தே—னெனக்கவனைக்
கொண்டேன்பிரானாகக்கொள்வதுமேயின்புற்றேன்
உண்டேயெனக்கரியதொன்று.

ஒன்றேநினைந்திருந்தேனொன்றேதுணிந்தொழிந்தேன்
ஒன்றேயென்னுள்ளத்தினுள்ளடைத்தே—னொன்றேகாண்
கங்கையான்றிங்கட்கதிர்முடியான்பொங்கொளிசேர்
அங்கையாற்காளாமது. ௰௧

அதுவேபிரானாமாறாட்கொள்ளுமாறும்
அதுவேயினியறிந்தோமானா[illegible]துவே
பனிக்கணங்குகண்ணியாரொண்ணுதலின்மேலோர்
தனிக்கணங்குவைத்தார்தகவு. ௰௨

தகவுடையார்தாமுளரேற்றாரகலஞ்சாரப்
புகவிடுதல்பொல்லாதுகண்டீர்—மிகவடர
னூர்ந்தி[illegible]காகமொருநாண்மலைமகளைச்
சார்ந்[illegible]டுமே[illegible]வந்தான். ௰௩

[illegible]னேதனிநெஞ்சந்தன்னையுய்க்கொள்வான்
றானேபெருஞ்சேமஞ்செய்யுமாற்—றானேயோர்
பூணாகத்தாற்பொலிந்துபொங்கழல்சேர்ந்தங்கமுழு
நீணாகத்தானைநினைந்து. ௰௪

நினைந்திருந்துவானவர்கணின்மலர்ப்பாதம்
புனைந்தடிபொருந்தமாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வாய்செஞ்சடையாய்வேதியனேயென்கின்றேற்
கென்செய்வான்சொல்லோவினி. ௰௫

இனியோநாமுய்ந்தோமிறைவனருள்சேர்ந்தோம்
இனியோரிடரில்லோநெஞ்சே—யினியோர்
வினைக்கடலையாக்குவிக்குமீளாப்பிறவிக்
கனைக்கடலைநீந்தினோங்காண். ௰௬

காண்பார்க்குங்காணலாந்தன்மையனேகைதொழுது
காண்பார்க்குங்காணலாங்காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச்சிந்தையுளேதோன்றுமேதொல்லுலகுக்
காதியாய்நின்றவரன். ௰௭

அரனென்கோநான்முகனென்கோவரிய
பரனென்கோபண்புணரமாட்டேன்—முரணழியத்
தானவனைப்பாதத்தனிவிரலாற்செற்றானை
யானவனையெம்மானையின்று. ௰௮

இன்றுநமக்கெளிதேமாலுக்குநான்முகற்கும்
அன்றுமளப்பரியனானானை—யென்றுமோர்
மூவாமதியானைமூவேழுலகங்கள்
ஆவானைக்காணுமறிவு. ௰௯

அறிவானுந்தானேயறிவிப்பான்றானே
யறிவாயறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந்தானேவிரிசுடர்பாராகாசம்
அப்பொருளுந்தானேயவன். ௨௰

அவனேயிருசுடர்தீயாகாசமாவான்
அவனேபுவிபுனல்காற்றாவா—னவனே
யியமானனாயட்டமூர்த்தியுமாய்ஞான
மயனாகிநின்றானுமவர். ௨௧

வந்திதனைக்கொள்வதேயொக்குமிவ்வாளரவின்
சிந்தையதுதெரிந்துகாண்மினோ—வந்தோர்
இராநீரிருண்டனையகண்டத்தீரெங்கள்
பிரானீருஞ்சென்னிப்பிறை. உ௨

பிறையும்புனலுமனலரவுஞ்சூடும்
இறைவரெனக்கிரங்காரேனுங்—கறைமிடற்ற
எந்தையார்க்காட்பட்டேனென்றென்றிருக்குமே
யெந்தையா னுள்ளமிது. உ௩

இதுவன்றேயீசன்றிருவுருவமாமா
றிதுவன்றேயென்றனக்கோர்சேமம்—மிதுவன்றே
மின்னுஞ்சுடருருவாய்மீண்டாயென்சிந்தனைக்கே
யின்னுஞ்சுழல்கின்றதிங்கு. உ௪

இங்கிருந்துசொல்லுவதெனெம்பெருமானெண்ணாதே
யெங்கும்பலிதிரியுமெத்திறமும்—பொங்கிரவில்
ஈமவனத்தாடுவதுமென்னுக்கென்றாராய்வோம்
நாமவனைக்காணலுற்றன்று. உ௫

ஞான்றகுழற்சடைகள்பொன்வரைபோன்மின்னுவன
போன்றகறைமிடற்றான்பொன்மார்பின்—ஞான்றெங்கும்
மிக்கயலேதோன்றவிளங்கிமிளிருமே
யக்கயலேவைத்தவரவு. உ௬

அரவமொன்றாகத்தணியுந்தழலோன்
பரவித்தொழுதிரந்தோம்பன்னாண்—முரணழிய
ஒன்னார்தம்மூவெயிலுமோரம்பாலெய்தானே
பொன்னாரமற்றொன்றணி. உ௭

பூணாகவொன்றுபுனைந்தொன்றுபோங்கதனில்
நாணாகமேன்மிளிரநன்கமைத்துக்—கோணாகம்
பொன்முடிமேற்சூடுவதுமெல்லாம்பொறியிலியேற்
கென்முடியாதாகவிவர். ௨௮

இவரைப்பொருளுணரமாட்டாதாரெல்லாம்
இவரையிகழ்வதேகண்டீ—ரிவர்தமது
பூக்கோலமேனிப்பொடிபூசியென்பணிந்த
பேய்க்கோலங்கண்டார்பிறர். ௨௯

பிறரறியலாகாப்பெருமையருந்தாமே
பிறரறியும்பேருணர்வுந்தாமே—பிறருடைய
என்பேயணிந்திரவிற்றீயாடுமெம்மானார்
வன்பேயுந்தாமுமகிழ்ந்து. ௩௰

மகிழ்ந்திம்மடநெஞ்சேமாணிடரினியுந்
திகழ்ந்திப்பெருஞ்சேமஞ்சேர்ந்தா—யிகழாதே
யாவொன்பேயேனுமணிந்துழல்வார்க்காட்பட்ட
பேரன்பேயின்னும்பெருகு. ௩௧

பெருகொளியசெஞ்சடைமேற்பிள்ளைப்பிறையின்
ஒருகதிரோபோந்தொழுகிற்றொக்குந்—தெரியின்
முதற்கண்ணான்முப்புரங்களன்றெரித்தான்மூவா
நுதற்கண்ணான்றன்மார்பினூல். ௩௨

நூலறிவுபேசிநுழைவிலாதார்திரிக
நீலமணிமிடற்றுனீர்மையே—மேலுலகத்
தெக்கோலத்தெவ்வுருவாயெத்தவங்கள்செய்வார்க்கும்
அக்கோலத்திவ்வுருவேயாம். ௩௩

ஆமாறறியாமேவல்வினைகளந்தரத்தே
நாமாவென்றேத்தாநகர்மூன்றும் - வேமா
றொருகணையாற்செற்றானையுள்ளத்தாலுள்ளி
யிருகணையாதாளாயநும். ௩௪

அதுங்கண்டாய்வெண்மதியென்றஞ்சியிருள்போந்
திடங்கொண்டிருக்கின்றதொக்கும் - படங்கொள்
அணிமிடற்றபேழ்வாயரவசைத்தான்கோல
மணிமிடற்றினுள்ளமறு. ௩௫

மறவுடையகண்டத்திர்வ[...]ர்சடைமேனாகம்.
தெறுமென்றுதேய்ந்தழலுமா[...] - வுறுவான்
வளரவீதோடுமேற்றனதலையஞ்சி
வளருமோபிள்ளைமதி. ௩௬

மதியாவடல்வுணர்மாமதின்மூன்றட்ட
மதியாவளர்சடையிறையை - மதியாலே
யென்பா[...]கயாலிகழாதேத்தவாயிவ்வுலகில்
என்பா[...]க்கைய[...]ப்பிறவாரீண்டு. ௩௭

[...]டொளிசேர்வானத்தெழுமதியைவானரவின்
நீண்டச்சிறுமியதேபோலாதே - பூண்டதோர்
தாரேறுபாம்புடையான்மார்பிற்றழைந்திலங்கு
கூரேறுகாரோனக்கொம்பு. ௩௮

கொம்பினையோர்பாகத்துக்கொண்டழகன்றன்
அம்பவளமேனியதுமுன்னாளு - செம்பொன்
அணிவரையேபோலும்பொடியணிந்தால்வெள்ளி
மணிவரையேபோலுமறித்து. ௩௯

மதித்துமடநெஞ்சே மனமாலுஞ்சொல்லிக்
குறித்துத்தொழுதொண்டர்பாதம் - குறித்தொருவர்
கொள்ளாததிங்கட் குறுங்கண்ணிகொண்டார்மாட்
டுள்ளாதார்கூட்டமொருவு. ௪௰

ஒருபாலுலகளந்தமாலவனாமற்றை
யொருபாலுமையவளாமென்றால் - இருபாலும்
நின்னுருவமாகநிறந்தெரியமாட்டோமால்
நின்னுருவோமின்னுருவோநேர்ந்து. ௪௧

நேர்ந்தரவங்கொள்ளச்சிறுகிற்றேயதனை
பேர்ந்தளவேகொண்டிலங்குமெய்த்தாயோ - பேர்ந்து
வளங்குழவித்தாய்வளரமாட்டாதோவென்றே
இளங்குழவித்திங்களிது. ௪௨

திங்கள்தருசடிச்சிலபலிக்கென்றூர்திரியேல்
எங்கள்பெருமானேயென்றிரந்து - பொங்கொளிய
வானோர்விலக்காரேல்யாம்விலக்கவல்லமே
தானேயறிவான்றனக்கு. ௪௩

தனக்கேயடியேனாய்த்தன்னடைந்துவாழும்
எனக்கேயருளாவாறென்கொல் - மனக்கினிய
சீராளன்கங்கைமணவாளன்செம்மேனிப்
பேராளன்வானோர்பிரான். ௪௪

பிரானவனைநோக்கும்பெருநெறியேபேணிப்
பிரானவன்றன்பேரருளேவேண்டிப் - பிரானவனை
எங்குற்றானென்பீர்களென்போல்வார்சிந்தையினும்
இங்குற்றான்காண்பார்க்கெளிது. ௪௫

எளியதிதுவென்றேயேழைகாள்யாதும்
அளியீரறிவிலீராவா—வொளிகொண்மிடற்
றெந்தையராப்பூண்டுழலுமெம்மானையுள்ளிநைந்த
சிந்தையராய்வாழுந்திறம். ௨௬

திறத்தான்மடநெஞ்சேசென்றடைவதல்லாற்
பெறத்தானுமாதியோபேதாய் - நிறத்த
இருவடிக்கண்ணேழைக்கொருபாகமீந்தான்
திருவடிக்கட்சேருந்திரு. ௨௭

திருமார்பிலேனச்செழுமருப்பைப்பார்க்கும்
பெருமான்பிறைக்கொழுந்தைநோக்கு - மொருநாள்
இதுமதியென்றொன்றாகவின்றளவுந்தேரா
ததுமதியொன்றில்லாவரா. ௨௮

அராவிவளைத்தனையவங்குழவித்திங்கள்
விராவுகதிர்விரியவோடி - விராவுதலாற்
பொன்னொடுவெள்ளிப்புரிபுரிந்தாற்போலுமே
தன்னொடேயொப்பான்சடை. ௨௯

சடைமேலக்கொன்றைதருக்கனிகள்போர்த்த
புடைமேவித்தாழ்ந்தனவேபோலு - முடிமேல்
வலப்பாலக்கோலமதிவைத்தான்றன்பங்கின்
குலப்பாவைநீலக்குழல். ௩௰

குழலார்சிறுபுறத்துக்கோல்வளையைப்பாகத்
தெழிலாகவைத்தேகவேண்டா-கழலார்ப்பப்
பேரிரவிலீமப்பெருங்காட்டிற்பேயோடும்
ஆரழல்வாய்நீயாடுமங்கு. ௩௧

அங்கண்முழுமதியஞ்செக்கரகல்வானத்
தெங்குமினிதெழுந்தாலொவ்வாதே - செங்கண்
திருமாலைப்பங்குடையான்செஞ்சடைமேல்வைத்த
திருமாலைத்தோன்றலதோர்சீர். ௬௨

சோர்ந்தகொன்றைமலர்தழைப்பச்சேணுலவி
நீர்ந்தபேரியாறுநீத்தமாய்ப் - போரார்ந்த
நாண்பாம்புகொண்டசைத்தநம்மீசன்பொன்முடிதான்
காண்பார்க்குச்செவ்வேயோர்கார். ௬௩

காருருவக்கண்டத்தெங்கண்ணுதலேயெங்கொளித்தாய்
ஓருருவாய்நின்னோடுழி[illegible] - னீருருவ
மேகத்தாற்செய்தனையமேனியானின்னுடைய
பாகத்தான்காணாமேபண்டு. ௬௪

பண்டமராஞ்சப்படுகடலினஞ்சுண்டு
கண்டக்கறுத்ததுவுமன்றியே - யுண்டு
பணியுறுவார்செஞ்சடைமேற்பான்மதியினுள்ளே
மணிமறுவாய்த்தோன்றும்வடு ௬௫

வடுவன்றெனக்கருதிநீமதித்தியாயின்
சுடுவெண்பொடிநிறத்தாய்சொல்லாய் — படுவெண்
புலாற்றலையினுள்ளூண்புறம்பேசக்கேட்டோ
நிலாத்தலையிற்சூடுவாய்நீ. ௬௬

நீயுலகமெல்லாமிரப்பினுநின்னுடைய
தீயவரவொழியச்செல்கண்டாய் - தூய
மடவரலார்வந்துபலியிட்டாரஞ்சி
விடவரவமேலாடவிங்கு. ௬௭

மிக்கமுழங்கெரியும்வீங்கியபோர்க்கிரும்
ஒக்கவுடனிருந்தாலொவ்வாதே—செக்கர்போல்
ஆகத்தான்செஞ்சடையுமாங்கவன்றன்பொன்னுருவிற்
பாகத்தாள்பூங்குழலும்பண்பு. ௬௮

பண்புணரமாட்டேனாய்நீயேபணித்துக்காண்
கண்புணருநெற்றிக்கறைக்கண்டா—பெண்புணரும்
அவ்வுருவோமாலுருவோவானேற்றாய்நீறணிவ
தெவ்வுருவோநின்னுருவமேல். ௬௯

மேலாய்மேகங்கள்கூடிப்பொற்பொன்விலங்கல்
போலாமொளிபுலர்த்தாலொவ்வாதே—மாலாய
கைம்மாமதக்களிற்றுக்காருரிவைப்போர்த்தபோ
தம்மான்றிருமேனியன்று. ௭௰

அன்றுந்திருவுருவங்காணாதேயாட்பட்டேன்
இன்றுந்திருவுருவங்காண்கிலே—னென்றுந்தான்
எவ்வுருவோநும்பிரானென்பார்கட்கென்னுரைக்கேன்
எவ்வுருவோநின்னுருவமேது. ௭௧

ஏதொக்குமேதொவ்வாதேதாகுமேதாகா
தேதொக்குமென்பதனையாரறிவார்—பூதப்பால்
வில்வேடனாகிவிசையனோடேற்றநாள்
வல்வேடனானவடிவு. ௭௨

வடிவுடையசெங்கதிர்க்குமாறாய்ப்பகலே
கொடிதுலவிமின்னெறிக்குஞ்சொல்லோ—கடியுலவு
சொன்முடிவொன்றில்லாதசோதியாய்சொல்லாயால்
நின்முடிமேற்றிங்களினிலா. ௭௩

நிலாவிலங்குவெண்மதியைநேடிக்கொள்வான்போ
லுலாவியுழிதருமாகொல்லோ—நிலாவிருந்த
செக்கரவ்வானமேயொக்குந்திருமுடிக்கே
புக்கரவங்காலையேபோன்று. ௬௪

காலையேபோன்றிலங்குமேனிகடும்பகலின்
வேலையேபோன்றிலங்கும்வெண்ணீறு—மாலையின்
றாங்குருவேபோலுஞ்சடைக்கற்றைமற்றவற்கு
வீங்கிருளேபோலுமிடறு. ௬௫

மிடற்றில்விடமுடையீருமிடற்றைக்கூறி
மிடற்றில்விடங்கொண்டவாறே—மிடற்றகத்து
மைத்தாமிருள்போலும்வண்ணங்கரிதாலோ
பைத்தாடுநும்மார்பிற்பாம்பு. ௬௬

பாம்புமதியுமடமானும்பாய்புலியுந்
தாம்பயின்றுதாளருவிதாங்குதலா—லாம்பொன்
உருவடிவிலோங்கொளிசேர்கண்ணுதலான்கோலத்
திருவடியின்மேயசிலம்பு. ௬௭

சிலம்படியாளூடலைத்தான்றவிர்ப்பான்வேண்டிச்
சிலம்படிமேற்செவ்வரத்தஞ்சேர்த்து—நலம்பெற்
றெதிராயசெக்கரினுமிக்கோலஞ்செய்தான்
முதிராமதியான்முடி. ௬௮

முடிமேற்கொடுமதியான்முக்கணனல்ல
வடிமேற்கொடுமதியோங்கூற்றைப்—படிமேற்
குனிவவல்லமாமடிமைகொண்டாடப்பெற்றோம்
இனியவலமுன்போவெமக்கு. ௬௯

ஏழைக்கிதுவோபேராசையென்றுந்தவிரா
தெமக்கொருநாள்காட்டுதியோவெந்தாய் — அமைக்கவே
போந்தெரிபாய்ந்தன்னபுரிசடையாய்பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந்தாடுமிடம். ௭௰

இடப்பால்வானத்தெழுமதியைநீயோர்
மடப்பாவைதன்னருகேவைத்தா — யிடப்பாகங்
கொண்டாண்மலைப்பாவைகூறென்றுங்கண்டிலங்காண்
கண்டாயேமுக்கண்ணாய்கண். ௭௧

கண்ணெட்டுந்தையென்றிறைஞ்சிக்கைப்பணியான்செய்யேனே
அண்டம்பெறினுமதுவேண்டேன் — றுண்டஞ்சேர்
விண்ணாளுந்திங்களாய்மிக்குலகமேழினுக்குங்
கண்ணாளாவீதென்கருத்து. ௭௨

கருத்தினால்நீகருதுமெல்லாமுடனே
திருத்தலாஞ்சிக்கெனநான்சொன்னேன் — பருத்தரங்க
வெள்ளநீரேற்றானடிக்கமலநீவிரும்பி
உள்ளமேயெப்போதுமோது. ௭௩

ஓதநெடுங்கடல்களெத்தனையுமுய்த்தட்ட
ஏதுநிறைந்தில்லையென்பரால் — பேதையர்கள்
எண்ணாதிடும்பலியாலென்னோநிறைந்தவா
கண்ணார்கபாலக்கலம். ௭௪

கலங்குபுனற்கங்கையூடாலலாலும்
இலங்குமதியியங்கலாலு — மலங்கொள்
பரிசுடையானீண்முடிமேற்பாம்பியங்கலாலும்
விரிசடையாங்காணில்விசும்பு. ௭௫

விசும்பில்விதியுடையவிண்ணோர்பணிந்து
பசும்பொன்மணிமகுடந்தேய்ப்ப—முசிந்தெங்கும்
எந்தாய்தழும்பேறியேபாவம்பொல்லாவாம்
அந்தாமரைபோலடி. ௭௬

அடிபேரிற்பாதாளம்பேருமடிகள்
முடிபேரின்மாமுகடுபேரும்—கடக
மறிந்தாடுகைபேரில்வான்றிசைகள்பேரும்
அறிந்தாடுமாற்றாதரங்கு. ௭௭

அரங்கமாய்ப்பேய்க்காட்டிலாடுவான்வாளா
இரங்குமோவெவ்வுயிர்க்குமேழா—யிரங்குமேல்
என்னாகவையான்றானெவ்வுலகமீந்தளியான்
பன்னாளிரந்தாற்பணிந்து. ௭௮

பணிந்தும்படர்சடையான்பாதங்கள்போதால்
அணிந்துமணிந்தவரையேத்தத்—தணிந்தென்றும்
எந்தையார்க்காட்செய்யப்பெற்றவிதுகொலோ
சிந்தையார்க்குள்ளசெருக்கு. ௭௯

செருக்கினால்வெற்பெடுத்தவெத்தலையோர்திண்டோள்
அரக்கனையுமுன்னின்றடர்த்த—திருத்தக்க
மாலயனுங்காணாதாற்றிமகிழ்ந்தேத்தக்
காலனையும்வென்றுதைத்தகால். ௮௰

காலனையும்வென்றோங்கடுநாகங்கைகழன்றோம்
மேலையிருவினையும்வேறறுத்தோம்—கோல
அரணாவிந்தழியவெந்தீயம்பெய்தான்
சரணாரவிந்தங்கள்சார்ந்து. ௮௧

சார்ந்தார்க்குப்பொற்கொழுந்தேயொத்திலங்கிச்சாராது
பேர்ந்தார்க்குத்தீக்கொடியின்பெற்றியதாம்-நேர்ந்துணரின்
தாழ்சுடரோன்செங்கதிருஞ்சாயுந்தழல்வண்ணன்
வீழ்சடையேயென்றுரைக்குமின்.

மின்போலுஞ்செஞ்சடையான்மாலோடுமீண்டிசைந்தாம்
என்போலுங்காண்பார்கட்கென்றிறேற் - றன்போலும்
பொற்குன்றுநீலமணிக்குன்றந்தாமுடனே
நிற்கின்றபோலுநெடிது. அ௩

நெடிதாயபொங்கெரியுந்தண்மதியுநேரே
கடிதாங்கடுஞ்சுடரும்போலுங்—கொடிதாக
விண்டார்கண்மும்மதிலும்வெந்தீயினிலழியக்
கண்டாலுமுக்கணுங்கண். அ௪

கண்ணாரக்கண்டுமென்கையாரக்கூப்பியு
மெண்ணாரவெண்ணத்தாலெண்ணியும்—விண்ணோன்
எரியாடியென்றென்றுமின்புறுவன்கொல்லோ
பெரியானைக்காணப்பெறின். அ௫

பெறினும்பிறிதியாதும்வேண்டோநமக்கீ
தறினுமுறுதொழிலுமேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகணெற்றிமேல்வைத்தான்றன்பேயாய
நற்கணத்திலொன்றாயநாம். அ௬

நாமாலைசூடியுநம்மீசன்பொன்னடிக்கே
பூமாலைகொண்டுபுனைந்தன்பாய்—நாமோர்
அறிவினையேபற்றினலெற்றேதடுமே
எறிவினையேயென்னுமிருள். அ௭

இருளினுருவென்கோமாமேகமென்கோ
மருளின்மணிநீலமென்கோ - வருளெமக்கு
நன்றுடையாய்செஞ்சடைமேனக்கிலங்குவெண்மதியம்
ஒன்றுடையாய்கண்டத்தொளி. ௩௮

ஒளிவிலிவன்மகனையொண்பொடியாநோக்கித்
தெளிவுள்ளசிந்தையினிற்சேர்வா—யொளிநஞ்சம்
உண்டாவாயஃதிருப்பவுன்னுடையகண்டமிருள்
கொண்டவாறென்னிதனைக்கூறு. ௩௯

கூறெமக்கீதெந்தாய்குளிர்சடையைமீதழித்திட்
டேறமிகப்பெருகினென்செய்தி—சீறி
விழித்தூரும்வாளரவும்வெண்மதியுமீர்த்துத்
தெழித்தோடுங்கங்கைத்திரை. ௪௰

திரைமருவுசெஞ்சடையான்சேவடிக்கேயாளாய்
உரைமருவியாமுணர்ந்தோங்கண்டீர்—தெரியிலோ
இம்மைக்குமம்மைக்குமெல்லாமமைந்தோமே
எம்மைப்புறனுரைப்பதென். ௪௧

என்னையுடையானுமேகமாய்நின்றானுந்
தன்னையறியாததன்மையனும்—பொன்னைச்
சுருளாகச்செய்தனையதூச்சடையான்வானோர்க்
கருளாகவைத்தவவன். ௪௨

அவன்கண்டாய்வானோர்பிரானாவானென்றும்
அவன்கண்டாயம்பவளவண்ண—னவன்கண்டாய்
மைத்தமர்ந்தகண்டத்தான்மற்றவன்பாலென்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன்பாய்நீவிரும்பு. ௪௩

விருப்பினனீபிரியகில்லாயோவேறா
இருப்பிடமற்றில்லையோவென்னோ—பொருப்பன்மகள்
மஞ்சுபோன்மால்விடையாய்நிற்பிரிந்துவேறிருக்க
அஞ்சுமோசொல்லாயவள்.

அவளோர்குலமங்கைபாகத்தகலாள்
இவளோர்சலமகளுமீதே—தவளநீ
றென்பணிவீரென்றும்பிரிந்தறியீரீங்கிவருள்
அன்பணியார்சொல்லுமினிங்கார். ௧௫

ஆர்வல்லார்காணவரனவனையன்பென்னும்
போர்வையதனாலேபோர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தானாமுந்தனிநெஞ்சினுள்ளடைத்து
மாயத்தால்வைத்தோமறைத்து. ௧௬

மறைத்துலகமேழினிலும்வைத்தாயோவன்றேல்
உறைப்போடுமுன்கைக்கொண்டாயோ—நிறைத்திட்
டுளைந்தெழுந்தநீ[illegible]ரிப்பமூவுலகுமுள்புக்
களைந்தெழுந்த[illegible]ந்தியழல். ௧௭

அழலாடவங்கைசிவந்ததோவங்கை
அழகாலழல்சிவந்தவாறோ—கழலாடப்
பேயாடுகானிற்பிறங்கவனலேந்தித்
தீயாடுவாயிதனைச்செப்பு. ௧௮

செப்பேந்திளமுலையாள்காணவோதீப்படுகாட்
டப்பேய்க்கணமவைதாங்காணவோ—செப்பெனக்கொன்
றாகத்தானங்காந்தனலுமிழுமைவாய
நாகத்தாயாடுன்னடம். ௧௯

நடக்கிற்படிநடுங்குநோக்கிற்றிசைவேம்
இடிக்கினுலகனைத்துமேங்கு—மடுக்கற
பொருமேறேறுவானேறேபொன்னொப்பாய்நின்னே
[...]மேறேறுவொன்றுவுரை. ௱

உரையினிம்மாலையந்தாதிவெண்பாக்
கரைவினாற்காரைக்காற்பேய்சொற்—பரவுவார்
ஆராதவன்பினோடண்ணலைச்சென்றேத்துவார்
பேராதகாதல்பிறந்து. ௱௧

காரைக்காலம்மையார்

திருவாய்மலர்ந்தருளிய

அற்புதத்திருவந்தாதி

முற்றிற்று.

N 1914